போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருள்கள் சட்ட வழக்குகள் சிறப்பு நீதிமன்றம்,
விழுப்புரம்
முன்னிலை: திருமதி.எம்.எழிலரசி, பி.ஏ.,பி.எல்.,
சிறப்பு நீதிபதி(மு.கூ.பொ)
போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருள்கள்
சட்ட வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம்
2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12-ம் நாள் புதன்கிழமை
சி.எம்.பி.எண். 444/2026

முகமது அத்திப் வயது 22,
த/பெ.மஸ்தான் ஜெஷரிப் ... மனுதாரர்/ எதிரி

எதிர்

அரசுக்காக
காவல் நிலைய அதிகாரி.
கள்ளக்குறிச்சி காவல் நிலையம்,
கா.நி.குற்ற எண்.332/2026 .. எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முகமது யாசர் அராபத்., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்கோப்புகளை பரிசீலனை செய்தும், இன்று இம்மன்றம் வழங்கும்.

## உத்தரவு

மனுதாரர் தரப்பில் பிரிவு 8(c) 20(b)(ii)(B)of NDPS Act-ன் கீழ் மனுதாரர் குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டதிலிருந்து மனுதாரரை ஜாமினில் விடுவிக்ககோரி இம்மனுவை பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் தரப்பில் மனுதாரர்/எதிரி பிரிவு8(c)20(b)(ii)(B) of NDPS Act-ன் கீழ் கூறப்படும் குற்றத்திற்காக மனுதாரர் 21.06.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர் இந்த நீதிமன்றம் விதிக்கக்கூடிய எந்த நிபந்தனையையும் ஏற்க தயாராக உள்ளார் என்றும், மனுதாரர் தனது பிணையில் விடுவதற்கான போதுமான பிணையதாரர்களை வைத்துள்ளதாகவும், எனவே மனுதாரரை பிணையில் விடுவிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பு வழக்கறிஞர் தரப்பில் எதிரி வெளிமாநிலத்திலிருந்து கஞ்சா போன்ற பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து வருகிறார் என்றும், மேலும் எதிரி கடந்த 21.06.2026ம் தேதி கைது செய்து எதிரியிடமிருந்து 1 கிலோ 130 கிராம் கஞ்சாவை கைப்பற்றி நீதிமன்ற காவலில் கடலூர் சிறையில் இருந்து வருகிறார் என்றும், மேலும் இவ்வழக்கானது தற்போது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் யாரிடமிருந்து கஞ்சாவை வாங்கினேன் என்பதை தெரிவித்துள்ளதாலும் அந்நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்ப வேண்டியுள்ளது என்றும், எதிரி பிணையில் வந்தால் வழக்கின் புலன் விசாரணை பாதிக்கப்படுவது மட்டுமின்றி எதிரி தலைமறைவாக கூடும் என்பதாலும், எதிரி மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடக்கூடும் என்பதால் மற்றும் இவர் நீதிமன்றத்தில் முறையாக ஆஜராகமாட்டார் என்பதாலும் இவரை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்து கற்றறிந்த சிறப்பு அரசு வழக்கறிஞர் வாதிட்டார்.

4. எதிரி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி பிரிவு 8(c)(20(b)(ii)(B) of NDPS Actன் கீழ் குற்றம் இழைத்ததற்காக எதிரி 21.06.2026ம் தேதியன்று நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எதிரி 52 நாட்கள் காவலில் இருந்து வருகிறார். எதிரி இந்நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனைக்கும் ஏற்க தயாராக உள்ளதாக கூறியுள்ளார். 21.06.2026ந் தேதி அன்று கைது செய்து மேலும் இவ்வழக்கானது தற்போது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் யாரிடமிருந்து கஞ்சாவை வாங்கினேன் என்பதை தெரிவித்துள்ளதாலும் அந்நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்ப வேண்டியுள்ளது என்றும், எதிரி பிணையில் வந்தால் வழக்கின் புலன் விசாரணை பாதிக்கப்படுவது மட்டுமின்றி எதிரி தலைமறைவாக கூடும் என்பதாலும், எதிரி மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடக்கூடும் என்பதால் மற்றும் இவர் நீதிமன்றத்தில் முறையாக ஆஜராகமாட்டார் என்பதாலும் அதனால் எதிரிக்கு பிணை வழங்க கடும் ஆட்சேபணை எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு எதிரியான முகமது கவுஸ் என்பவர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl.OP.No.19498 of 2026 மனுவில் 22.07.2026ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் நிபந்தனை பிணையில் சென்றுள்ளார். எனவே அதனடிப்படையில் சிறைவாச காலத்தையும், இந்த நீதிமன்றம் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்பட அவர் தயாராக இருப்பதையும் கருத்தில் கொண்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மேலும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கள்ளக்குறிச்சி அவர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் ரூ.10,000/-க்கான பிணைப்பத்திரத்தையும் அதே தொகைக்கு இரண்டு ஜாமின்தாரர்களையும் சமர்ப்பித்ததன் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமினில் விடுவிக்கப்படுகிறார். மறு உத்தரவு வரும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் ஆஜராகி தினமும் காலை 10.30 மணிக்கு கையெழுத்திட வேண்டும்.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு, என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 12.08.2026-ம் நாள் பகரப்பட்டது.

M EZHILARASI

Digitally signed by M EZHILARASI
Date: 2026.08.12 18:32:26 +0530

சிறப்பு நீதிபதி
போதைமருந்துகள்மற்றும் மனமயக்கப்பொருட்கள்
சட்ட வழக்குகள் சிறப்பு நீதிமன்றம்,
விழுப்புரம் (மு.கூ.பொ)